**வணக்கம்**

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 23.12.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------

## தலைப்புச் செய்திகள்

- நாடு முழுவதும் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் 10 லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- முன்னாள் பிரதமர் பாரத ரத்னா சரண்சிங்கின் பிறந்த நாள் இன்று தேசிய விவசாயிகள் தினமாக கொண்டாடப்பட்டது.
- புதுச்சேரி அரசு சமூக நலத்துறை சார்பில் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தின விழா இன்று நடைபெற்றது.
- புதுச்சேரி கடற்கரை சாலையில் உள்ள மேரி கட்டிடத்தில் நடைபெற்ற மார்பக புற்றுநோய் இலவச மருத்துவ பரிசோதனை முகாமை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தொடக்கி வைத்தார்.

## மோடி-வேலை வாய்ப்பு

நாடு முழுவதும் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் 10 லட்சம் இளைஞர்களுக்கு மத்திய அரசின் பல்வேறு துறைகளில் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். பிரதமரின் ரோஜ்கார் யோஜனாவின் 14-ஆவது கட்ட நிகழ்வின் கீழ் 71 ஆயிரம் பேருக்கு பணி நியமன ஆணைகளை காணொளி வாயிலாக இன்று பிரதமர் வழங்கினார். அப்போது உரையாற்றிய அவர் ரோஜ்கார் யோஜனா முகாம்கள் இளைஞர்களின் திறனை வெளிப்படுத்த வாய்ப்பளிப்பதோடு அவர்களின் ஆளுமையை மேம்படுத்துவதாகவும்

குறிப்பிட்டார். மத்திய அரசு பல்வேறு அமைச்சகங்கள், துறைகள், கல்வி நிறுவனங்களில் கடந்த 10 ஆண்டுகளாக பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருவதாக தெரிவித்த பிரதமர் இளைஞர்களின் திறன் மேம்பாட்டு திறமைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தி தருவதே மத்திய அரசின் உயர் முன்னுரிமை என்று கூறினார்.

செல்போன் உற்பத்தியில் இந்தியா உலக அளவில் 2-ஆவது இடத்திற்கு உயர்ந்துள்ளது என்றும், புதிய தொழில்களுக்கான கட்டமைப்பை உருவாக்குவதில் உலக அளவில் பெரிய நாடாக இந்தியா விளங்குகிறது என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

ரோஜ்கார் மேளா திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 45 இடங்களில் மத்திய அமைச்சர்கள் கலந்து கொண்டு இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினர். இதில் உள்துறை, நிதி, அஞ்சல், உயர்கல்வி, சுகாதாரம், போன்ற துறைகளில் பணி ஆற்றுவதற்கான ஆணைகள் வழங்கப்பட்டன.

<u>தேசிய விவசாயிகள் தினம்</u>

முன்னாள் பிரதமர் பாரத ரத்னா சரண்சிங்கின் பிறந்த நாள் இன்று தேசிய விவசாயிகள் தினமாக கொண்டாடப்பட்டது. இதனை ஒட்டி, புதுடெல்லியில் உள்ள அவரது நினைவிடத்தில் குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் மலர் தூவி மரியாதை செலுத்தினார். அப்போது பேசிய அவர் விவசாயிகளின் நலன் மற்றும் கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தவும் நாட்டின் வளர்ச்சிக்காகவும் தமது வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டவர் சரண்சிங் என்று புகழாரம் சூட்டினார். முன்னாள் பிரதமர் சரண்சிங்கின் பிறந்த நாளை ஒட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில் ஏழை எளிய மக்களுக்காகவும், விவசாயிகளின் நலனுக்காகவும் பாடுபட்டவர் சரண்சிங் என்று புகழ் மாலை சூட்டி உள்ளார். நாட்டுக்காக அர்ப்பணிப்பு

உணர்வோடு அவர் அற்றிய அரும்பணிகள் என்றென்றும் நினைவு கூற தக்கவை என்றும் பிரதமர் தமது சமூக ஊடக பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

**ஜிதேந்திர சிங்**

கடந்த 10 ஆண்டுகளில் குப்பைகளில் இருந்து செல்வத்தை உருவாக்கும் வகையில் மத்திய அரசு புதிய வழிகளை ஏற்படுத்தி உள்ளதாக மத்திய பணியாளர் பொது மக்கள் குறை தீர்ப்பு மற்றும் ஓய்வூதியத் துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று நல்லாட்சி செயல்முறைகள் குறித்த தேசிய அமர்வை தொடக்கி வைத்துப் பேசிய அவர் நிர்வாக சீர்திருத்தங்களின் பல்வேறு கட்ட வளர்ச்சியைப் பற்றி எடுத்துக் கூறினார். நடைமுறைகளில் உள்ள காகித கோப்புகளின் பயன்பாட்டைக் குறைப்பது, அப்புறப்படுத்தப்பட்ட பழைய நாற்காலிகள், கணினிகள் போன்றவற்றால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அதுதொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம் என்று தெரிவித்தார். மேலும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் கூற்றுப்படி பள்ளிகளில் சுத்தமான கழிவறைகள் இருப்பதை உறுதி செய்வது குறித்து தெரிவித்த அமைச்சர் பல்வேறு துறைகளின் ஒருங்கிணைப்போடு இந்த நோக்கத்தை நம்மால் நிறைவேற்ற முடியும் என்று தெரிவித்தார்.

**□ாற்றுத் திறனாளிகள்**

புதுச்சேரி அரசு சமூக நலத்துறை சார்பில் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தின விழா இன்று புதுச்சேரியில் கொண்டாடப்பட்டது. சித்தன்குடியில் உள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கலந்து கொண்டு தொடக்கி வைத்தார். அப்போது சிறப்புரை ஆற்றிய அவர் உடல் குறைபாடு உள்ளவர்களை குறைத்து மதிப்பிடும் சமுதாய தடைகளை உடைத்து எறியும் விழா என்பதால் இந்த விழாவில் கலந்து கொள்வதில்

தாம் மகிழ்ச்சி அடைவதாக தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில்............

இவ்விழாவில் முதலமைச்சர் திரு ரங்கசாமி மாற்றுத் திறனாளிகளுக்கு மாநில விருதுகளை வழங்கி உரையாற்றினார். அப்போது மாற்றுத் திறனாளிகள் அவ்வப்போது அரசுக்கு வைக்கும் கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவித்தார். அவர்கள் சுயமாக தொழில் தொடங்குவதற்கு பயிற்சி அளித்து அதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தி தருவது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும் என்று கூறினார். புதுவை அரசின் வேலை வாய்ப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு 4 சதவிகித இடஒதுக்கீடு வழங்கப்படுவது குறித்து பேசிய அவர் .....................

இவ்விழாவில் சட்டப் பேரவைத் தலைவர் திரு செல்வம், சமூகநலத்துறை அமைச்சர் திரு ஜெயக்குமார், அரசுச் செயலர்கள் டாக்டர் முத்தம்மா, திரு பங்கஜ் குமார் ஜா, சமூக நலத்துறை இயக்குநர் திருமதி ராகினி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

__ருத்துவ முகாம்__

புதுச்சேரி கடற்கரை சாலையில் உள்ள மேரி கட்டிடத்தில் India turns pink என்ற தன்னார்வ அமைப்பு சார்பில் மார்பக புற்றுநோய் இலவச மருத்துவ பரிசோதனை முகாமிற்கு இன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இம்முகாமை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தொடக்கி வைத்தார். அப்போது சிறப்புரை ஆற்றிய அவர் அறிகுறிகள் தென்படும் பட்சத்தில் மருத்துவ பரிசோதனை செய்து கொள்ள பெண்கள் தயக்கம் காட்டக் கூடாது என்றும் வீட்டில் உள்ளவர்களும் சமுதாயத்தில் உள்ளவர்களும் இதுகுறித்து விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இம்முகாம் குறித்து எமது செய்தியாளர் தரும் கூடுதல் தகவல்கள்...........

**_நல்லாட்சி வாரம்_**

காரைக்கால் மாவட்ட நிர்வாகம் சார்பில் அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரி வளாகத்தில் இன்று நடைபெற்ற நல்லாட்சி வாரத்தின் 5-ஆம் நாள் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் முனைவர் மணிகண்டன் கலந்து கொண்டு உரையாற்றினார். கடந்த 19-ஆம் தேதி முதல் நல்லாட்சி வாரம் காரைக்காலில் நடைபெற்று வருவதாகவும் இளைஞர்களின் முன்னேற்றத்திற்காகவே இந்நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதாகவும் தெரிவித்தார். கல்லூரி மாணவர்கள் பாடப்புத்தகங்களை மட்டும் படிக்காமல் சமூகம் சார்ந்த செய்திகளையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். மத்திய அரசு அறிமுகப்படுத்தி உள்ள புதிய கல்விக் கொள்கை மாணவர்களுக்கு பல்வேறு வாய்ப்புகளை வழங்குவதாகவும் இதனை அவர்கள் நன்றாக பயன்படுத்திக் கொண்டு வாழ்க்கையில் வளம் பெற வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

**_வானிலை_**

தெற்கு ஆந்திரா மற்றும் வடதமிழக கடலோரப் பகுதிகளில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி அடுத்த 24 மணி நேரத்தில் மேற்கு மற்றும் தென்மேற்கு திசையில் நகர்ந்து வடதமிழகம் மற்றும் தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளுக்கு அருகில் நிலவக் கூடும் என்றும் இதன் காரணமாக தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் அடுத்த 2 நாட்களுக்கு இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.